**தனிக் கவனம்.** **அவசரம்**

# கோயம்புத்தூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

**ந.க.எண். 3774 / ஆ4 /2015, நாள். 07.12.2015**

**கார்த்திகை 21, திருவள்ளுவராண்டு 2046.**

பொருள் : பள்ளிக்கல்வித்துறை – கோயம்புத்தூர் மாவட்டம் – 2016–17–கல்வி ஆண்டிற்கான மாணவர்கள் சேர்க்கை தொடர்பாக அனைத்துவகை பள்ளித்தலைமை ஆசிரியர்கள்மற்றும் முதல்வர்கள் பின்பற்ற வேண்டிய அறிவுரைகள் – அனைத்துவகை பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் முதல்வர்களின் தனிக்கவனம் ஈர்த்தல் – சார்பு.

----

**மேற்காண் பொருள் சார்பாக** 2016–17–கல்வி ஆண்டிற்கான மாணவர்கள் சேர்க்கை தொடர்பான **கீழ்காணும் அறிவரைகளை அனைத்து வகைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் மற்றும் முதல்வர்கள் கண்டிப்பாக பின்பற்றுமாறு அறிவுறுத்தப் படுகிறார்கள்.**

**மாணவர்கள் சேர்க்கை பள்ளிக்கல்வித்துறை அனுமதிக்கும் மாதத்திற்க்கு முன்பாகவே ஆரம்பித்து நடத்துதல் கூடாது. அங்ஙனம் மாணவர்கள் சேர்க்கையை முன்னதாகவே நடத்துதல் என்பது விதிகளுக்கு புறம்பானது. இந்நிகழ்வுகளின் உண்மைத்தன்மை தெரியவரும் பட்சத்தில் சம்பந்தப் பட்ட பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் மற்றும் முதல்வர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது. எனவே எந்த ஒரு பள்ளியிலும் விதிகளை மீறி LKG முதல் எந்த ஒரு வகுப்பிற்கும் ஏப்ரல் 2016–க்கு முன்னர் சேர்க்கையை மேற்கொள்ளக்கூடாது என அனைத்து வகை தலைமை ஆசிரியர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.**

1. **குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009, பிரிவு 12(1) (c)**–ன் படி நுழைவு நிலை வகுப்பில் நலிவடைந்த மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினரின் குழந்தைகளுக்கு குறைந்த பட்சம் 25% சேர்க்கை நடைமுறைகள் சார்ந்து வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டு 2013–14–ம் கல்வியாண்டு முதல் அப்பிரிவில் சேர்க்கை நடைமுறைப்படுத்தப்பட்டது.

   2016–17 ஆம் கல்வி ஆண்டிற்கான சேர்க்கைத் தொடர்பான பணிகளை மேற்கொள்ளுவதற்கு காலஅட்டவணையை பள்ளிக்கல்வித்துறை விரைவில் வெளியிட உள்ளது. அரசு வெளியிடும் வழிகாட்டு நெறிமுறைகள் அடிப்படையில்தான் மாணவர் சேர்க்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என திட்டவட்டமாக அனைத்து தனியார் பள்ளிகளுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

   எனவே, 2016–17 கல்வி ஆண்டிற்கான சேர்க்கையை முன்கூட்டியே நடத்துவது மற்றும் இது தொடர்பான விளம்பரங்களை வெளியிடுவது அரசு விதிமுறைகளுக்கு எதிரானது ஆகும். எந்த ஒரு பள்ளியிலும் விதிமுறைகளுக்கு எதிராக முன்கூட்டியே சேர்க்கை நடைபெறும் தகவல் உண்மை என கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் முதல்வர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

2. 2016–17 கல்வி ஆண்டிற்கான சேர்க்கையின் போது மேல்நிலைப்பிரிவில் மாணவர்களை சேர்க்கும் போது தலைமை ஆசிரியர்கள் **அரசாணை நிலை எண் 587, பள்ளிக்கல்வித்துறை நாள் : 22.02.1978**–ன் படி செயல்பட வேண்டும். பத்தாம் வகுப்பு மாணவர்களின் தேர்ச்சி குறித்த விவரங்கள் மற்றும் சேர்க்கை தொடர்பான வழிகாட்டுதல் ஆகியன பள்ளிக்கவ்வித்துறையால் வெளியிடப்பட்ட பின்னரே சேர்க்கையை மேற்கொள்ள வேண்டும்.

   2016–17–ம் கல்வியாண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு தனியார் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் மேல்நிலை வகுப்பில் மாணவர் சேர்க்கையின் போது ஒவ்வொரு பாடபிரிவிலும் அரசு நிர்ணயித்துள்ள இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் மாணவர்கள் கட்டாயம் சேர்க்கப்பட வேண்டும் என்றும், இட ஒதுக்கீட்டினை மீறி செயல்படும் மற்றும் முன்கூட்டியே சேர்க்கையை நடத்தும் பள்ளித் தலைமை ஆசிரியர் மற்றும் முதல்வர்கள் மீது துறை ரீதியாக தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அனைத்து வகை மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**முதன்மைக்கல்வி அலுவலர்,**
**கோயம்புத்தூர்.**

**பெறுநர்**

அனைத்துவகைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் முதல்வர்கள்.

**நகல் :**

மாவட்டக்கல்வி அலுவலர்கள், கோயம்புத்தூர் மற்றும் பொள்ளாச்சி
மாவட்டத் தொடக்கப்கல்வி அலுவலர், கோயம்புத்தூர்
மெட்ரிக் பள்ளி ஆய்வாளர், கோயம்புத்தூர்.
(தகவலுக்காகவும் உரிய நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது )